**செய்தி வெளியீடு எண்: 304** **நாள் : 21.06.2016**

**2016-2017**–ஆம் கல்வியாண்டிற்கு இளங்கலை பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்ற தகுதிவாய்ந்த மாணவர்கள் அரசு / அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரி மற்றும் கலைக் கல்லூரிகள் / அண்ணா பல்கலைக் கழகம் / துறைகள் / வட்டார மையங்கள் / சென்னை பல்கலைக் கழகம் / பாரதியார் பல்கலைக் கழகம் (எம்.பி.ஏ. மட்டும்) / சுயநிதி பொறியியற் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை 600025 மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம், சென்னை 600006 அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. முதுநிலை பட்டப்படிப்பு (MBA/MCA) சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் இணையதள மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.

இணையதள மூலமாக விண்ணப்பிக்க தேவையான நெறிமுறைகள் :

| | |
|---|---|
| 1) | **விண்ணப்பிக்கும் முறை:** www.gct.ac.in / www.tn-mbamca.com என்ற இணையதள வாயிலாக விண்ணப்பித்தல் வேண்டும்.<br><br>ஆன்–லைன் மூலமாக விண்ணப்பிப்பதற்கு<br><br>1) விண்ணப்பதாரர் தேவையான சான்றுகளுடன் நேரிடையாக ஆன்–லைன் மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.<br>2) ஆன்–லைன் மூலமாக விண்ணப்பித்த பின்பு அதை பிரதி எடுத்து உரிய ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். |
| 2) | **இணையதள மூலமாக விண்ணப்பங்கள் பதிவு செய்யும் நாள்:**<br>துவங்கும் நாள்: 4.7.2016, முடிவுறும் நாள்: 15.7.2016, மாலை 5.00 மணி வரை |
| 3) | **பதிவுக் கட்டணம் :** விண்ணப்பதாரர் ரூ.300/–க்கான வரைவோலையை "The Secretary, TN MBA / MCA Admissions – 2016, GCT" payable at Coimbatore, என்ற பெயரில் பெற்று பதிவுக் கட்டணமாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணமின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் காரணமின்றி நிராகரிக்கப்படும். ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவர்களுக்கான விண்ணப்பம் ரூ.150/– (விண்ணப்பதாரர்கள் சுய சான்றொப்பமிட்ட ஜாதிச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்). |
| 4) | **மேலும் விவரங்கள் அறிய** www.gct.ac.in / www.tn-mbamca.com இணையதள முகவரியில் "INFORMATION AND INSTRUCTIONS TO CANDIDATES" பக்கத்தில் பார்க்கவும். |
| | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுக் கட்டணத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: **15.7.2016**, மாலை **5.00 மணி** |
| | **விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :**<br><br>**செயலர்,**<br>**தமிழ்நாடு எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. மாணவர் சேர்க்கை – 2016**<br>**அரசினர் பொறியியற் கல்லூரி**<br>**கோயம்பத்தூர் 641013** |
| | சோ. மதுமதி, இ.ஆ.ப<br>சென்னை 600025 தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**